நெருப்பாற்றில் நீந்திப் பழக்கப்பட்ட தி.மு.க. இதிலும் வெற்றி பெறும்!

# பா.ஜ.க.வின் தோல்வி பயமே மாநில அரசுகள் - அமைச்சர்களை அச்சுறுத்தக் காரணம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அறிக்கை!



**சென்னை, ஜூன் 16 - பா.ஜ.க.வின் தோல்வி பயமே மாநில அரசுகள் & அமைச்சர்களை அச்சுறுத்தக் காரணம், நெருப்பாற்றில் நீந்திப் பழக்கப்பட்ட தி.மு.க. இதிலும் வெற்றி பெறும் என்றும், அமைச்சர் செந்தில் பாலாஜி நலம் பெற்று வருக என விழைந்தும் திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:**

2024 நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறுவது பா.ஜ.க.வுக்கு மிகக் கடினமானதொரு நிலை என்று பா.ஜ.க. அரசு வட்டாரமும் அதிகார மய்யங்களும் உணர்ந்திருப்பதால் அதன் தோல்வி பயத்தின் காரணமாகவே, வலுவான எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் உள்ள ஆட்சி அமைச்சர்களைத் தம்மிடம் உள்ள 'திரிசூல'மான சி.பி.அய்., வருமான வரித்துறை, அமலாக்கத் துறைகளை முழு வீச்சில் பயன்படுத்தி, தி.மு.க. போன்ற கட்சிகளை அச்சுறுத்தும் வகையினைக் கையாளத் துவங்கியுள்ளதற்கு எடுத்துக்காட்டுதான் தமிழ்நாடு மின்துறை அமைச்சர் செந்தில் பாலாஜியிடம் தொடர்ந்து நடத்தப்பட்ட வருமான வரித் துறை, அமலாக்கத் துறை சோதனைகள் ஆகும். அதன் மூலம் அவருக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள மன உளைச்சல் உடல் நலப் பாதிப்பு ஆகியவை அப்பட்டமான மனித உரிமைகள் பாதிப்பும் ஆகும்.

முன்பு 2011-2016இல் பழைய அ.தி.மு.க. ஆட்சியில் அமைச்சராக இருந்த போது, அவர்மீது தனி நபர்களால் தரப்பட்ட புகார்கள் அடிப்படையில் விசாரணை, சோதனைகள் என்று இப்போது நடத்த முன் வந்துள்ளது பா.ஜ.க. அரசு.

**அவப்பெயரை உருவாக்கும் முயற்சி!**

அவரும் தொடக்கத்திலிருந்தே அமலாக்கத் துறையின் விசாரணைக்கு முழு ஒத்துழைப்புக் கொடுப்பதாகக் கூறி, சொன்னபடி ஒத்துழைப்பையும் கொடுத்து வந்த நிலையில், தலைமைச் செயலகத்துக்கு வந்து சோதனையில் ஈடுபடுவதை தி.மு.க. ஆட்சி மீது மக்களுக்கு அவப்பெயரை உருவாக்கும் உத்தியாகவே கருத வேண்டியுள்ளது!

தி.மு.க.மீது சேற்றை வாரி இறைத்தாலும், அவற்றை சட்ட ரீதியாகவும், கொள்கை ரீதியாகவும் எதிர்கொள்ளும் துணிவும், வலிமையும் அதற்கு உண்டு; பல நெருக்கடிகள், அவதூறுகள், வழக்குகளை எதிர் கொண்டு வெற்றி பெற்ற வரலாறும் அதற்கு உண்டு!

சட்டப் போராட்டங்களானாலும், மக்கள் போராட்டமானாலும் இரண்டிலும் மக்கள் ஆதரவுடன் வெற்றி பெற்று சோதனைகளிலிருந்து மீண்ட வரலாறும் வலிமையும் தி.மு.க.வுக்கு எப்போதும் உண்டு! இப்போதும் உண்டு!

அமைச்சர் செந்தில் பாலாஜியின் உடல் நிலை மிகவும் சீர்கேடாகுமளவுக்கு, இப்படி நடப்பது ஜனநாயக விரோதம் மட்டுமல்ல; மனித உரிமைப் பறிப்பும்கூட நாம் இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம்!

**அமைச்சர் விரைவில் குணமடையட்டும்!**

மக்களுக்கு எந்த ஆட்சி எப்படிப்பட்டது என்பது தெளிவாகப் புரியும். அவர்கள் பொறுமைக்குப் பதில் கிடைக்க வேண்டிய நேரத்தில், கிடைக்க வேண்டிய முறையில் கிட்டும்! அமைச்சர் செந்தில் பாலாஜி விரைவில் குணமடைய விரும்புகிறோம்.

இத்தகைய நெருப்பாற்றில், நீந்திப் பழக்கப்பட்ட தி.மு.க. இந்தப் போராட்டத்திலும் புடம் போட்ட தங்கமாக வெளிவரும்.

ஜனநாயகத்தின் நிரந்தரக் காவலராகத் தன் கடமையைத் தவறாது ஆற்றும்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அமித்ஷா சென்னை வந்த 2 நாட்களில்

# அமைச்சர் செந்தில் பாலாஜியை கைது செய்தது திட்டமிட்ட சதி!

## மார்க்சிஸ்ட் கே.பாலகிருஷ்ணன் கண்டன அறிக்கை!



**சென்னை, ஜூன் 16 - உள்துறை அமைச்சர் சென்னை வந்த இரண்டே நாட்களில் அமைச்சர் செந்தில் பாலாஜியை கைது செய்தது திட்டமிட்ட சதி என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து செய்தியாளர்களை சந்தித்து பேசியதாவது; செந்தில் பாலாஜி உடல்நிலை குறித்து பிற அமைச்சர்களிடம் கேட்டறிந்தோம். செந்தில் பாலாஜி ஆஞ்சியோ பரிசோதனை முடிந்து ஓய்வு எடுப்பதால் அவரை சந்திக்க மருத்துவர்கள் அனுமதிக்கவில்லை. செந்தில் பாலாஜி வீட்டில் ஏன் சோதனை நடத்தியது என்று கூட அமலாக்கத் துறை தெரிவிக்கவில்லை.

குற்றச்சாட்டுகள் இருந்தாலும் கூட நள்ளிரவில் கைது செய்தது சரியா என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கண்டனம் தெரிவித்துள்ளது.

அமித்ஷா சென்னை வந்து சென்ற 2 நாட்களில் செந்தில் பாலாஜி கைது நடந்ததால் இது முன்கூட்டியே திட்டமிட்ட சதி. தி.மு.க. கூட்டணி கட்சிகளை மிரட்டவே செந்தில் பாலாஜி கைது செய்யப்பட்டுள்ளார்.

பா.ஜ.க.வின் இது போன்ற மிரட்டல் களுக்கு தி.மு.க. கூட்டணி கட்சிகள், எதிர்க்கட்சிகள் அஞ்சாது. அமலாக்கத்துறை கொடுத்த அழுத்தமே செந்தில் பாலாஜி உடல்நிலை பாதிப்புக்கு காரணம்.

பா.ஜ.க.வின் ஜனநாயக விரோத நடவடிக்கையை கண்டித்து தமிழ்நாடு முழுவதும் தொடர் போராட்டங்கள் நடத்தப்படும்.

பா.ஜ.க.வின் துணை அமைப்பாக அமலாக்கத் துறை மாறிவிட்டது. துணை ராணுவத்தை வைத்து போட்டி அரசாங்கம் நடத்துவது போல அமலாக்கத்துறை செயல்படுகிறது. பா.ஜ.க.வை எதிர்த்தால் இப்படிதான் மிரட்டுவோம் என்பதுபோல் அமலாக்கத்துறை நடவடிக்கை அமைந்துள்ளது.

பா.ஜ.க. அமைச்சர்கள் மீது புகார் அளித்தால் அதனை விசாரிக்க அமலாக்கத்துறை தயாராக இல்லை.

குற்றவாளிகளை எல்லாம் பாதுகாக்கக்கூடிய குற்றவாளி அரசாக ஒன்றிய பா.ஜ.க. அரசு உள்ளது.

இவ்வாறு தெரிவித்தார்.

மருத்துவப் படிப்புக்கு பொதுக் கலந்தாய்வு!

# தேசிய மருத்துவ ஆணைய அறிவிப்புக்குக் கண்டனம்!

## மாணவர் சங்கம் அறிக்கை!

சென்னை, ஜூன் 16- இடஒதுக்கீட்டை ஒழித்துக்கட்டும் வகையில் மருத்துவப்படிப்பு சேர்க்கைக்கு பொது கலந்தாய்வை அறிவித்துள்ள தேசிய மருத்துவ ஆணையத்தின் செயலுக்கு இந்திய மாணவர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது. இந்த அறிவிப்பை உடனே திரும்பப்பெற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து சங்கத்தின் மாநிலத் தலைவர் கோ.அரவிந்தசாமி, மாநிலச் செயலாளர் க.நிருபன் சக்கரவர்த்தி ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

இந்தியா முழுவதும் இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவப் படிப்பிற்கான மருத்துவ சேர்க்கை அனைத்தையும் பொதுக் கலந்தாய்வு மூலம் தேசிய மருத்துவ ஆணையமே நிரப்பும் என தேசிய மருத்துவ ஆணையம் அறிவித்துள்ளதை இந்திய மாணவர் சங்கம் தமிழ்நாடு மாநிலக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்த முடிவு மாநில உரிமைகளை சீர்குலைக்கும் நடவடிக்கை ஆகும். தமிழகம் உள்ளிட்ட பல மாநிலங்களில் நடைமுறையில் உள்ள இடஒதுக்கீட்டு முறையை முற்றிலும் ஒழித்துக் கட்ட வழி வகுக்கும் ஆபத்தான திட்டமாகும். இது குறித்து மாநில அரசுகளுடன் எந்தவொருகலந்தாலோசனையோ ஜன நாயக முறைப்படி விவாதமோ இன்றி ஒன்றிய அரசு இம்முடிவை தன்னிச்சை யாக எடுத்துள்ளது பெரும் அதிர்ச்சியை தான் ஏற்படுத்தியுள்ளது.

இதுவரையில் இளநிலை மருத்துவப் படிப்புகளில் சேர்வதற்காக தமிழ் நாட்டில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் 15 சதவீதம், முதுநிலை படிப்புகளுக்கு 50 சதவீதம், சூப்பர் ஸ்பெஷாலிட்டி 100 சதவீதம் என அகில இந்திய ஒதுக்கீட்டிற்கு ஒதுக்கப்படுகிறது. மீதமுள்ள இடங்கள் மாநில அரசு மூலம் நிரப்பப்படுகின்றன. தமிழக மாணவர்களுக்கு போதிய இடம் கிடைக்காததால், தமிழகத்தில் அகில இந்திய ஒதுக்கீட்டை முற்றாக ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை எழுந்த நிலையில், மொத்த மருத்துவ சேர்க்கை இடங்களையும் ஒன்றிய அரசு கபளீகரம் செய்ய முயல்வது சமூக நீதிக்கு எதிரான செயலாகும்.

தமிழ்நாட்டில் 69 சதவீத இடஒதுக்கீ டும் பின் பற்றப்படுவதோடு, பட்டியல் இன மாணவர்கள் இட ஒதுக்கீட்டில் அருந்ததியர்களுக்கான உள்ஒதுக்கீ டும், பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக் கீட்டில் இஸ்லாமியர்க்கு உள்ஒதுக்கீ டும் உள்ளது. மேலும் அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு 7.5 சதவீத இடஒதுக்கீடும் அவர்களுக்கு மாநில அரசே கட்டணம் செலுத்தும் முறையும் உள்ளது. தேசிய கலந்தாய்வு நடைபெற்றால் இட ஒதுக்கீடு மற்றும் அரசு பள்ளி மாணவர்களுக்கான இடம் என அனைத்தும் உரிமைகளும் பறிபோகும்.

மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து இடங்களையும் ஒன்றிய அரசு எடுத்துக் கொண்டால் மருத்துவம் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை தமிழகத்தில் குறையும். அதிக மருத்துவக்கல்லூரியை கொண்ட தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக மருத்துவ மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. எனவே இந்திய மாண வர் சங்கம் பொது கலந்தாய்வு முடிவை வன்மையாகக் கண்டிக்கிறது. இந்த முடிவை உடனடியாக திரும்பப்பெற வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மழைநீர் வடிகால் துறை**

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

ம.நீ.வ.து.ந.க.எண்.பி3/1572–3/2023

**இரு உறை குறுகிய கால முறையில்**
**மின்னணு மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு**

| வ. எண் | கோப்பு எண் மற்றும் பணியின் விவரம் | பணியின் அலுவலக மதிப்பு 18% வரி உட்பட (ரூபாய் இலட்சத்தில்) | முன் வைப்புத் தொகை | ஒப்பத்திற்கான தகுதியுள்ள வகுப்பு |
|---|---|---|---|---|
| 1 | ம.நீ.வ.து.ந.க.எண்.பி3/1572-3/2023 மண்டலம் - 15, வார்டு-195 உள்ள பெரிய சத்திர குளம் மேம்படுத்தி புனரமைக்கும் அமைக்கும் பணி சிப்பம்-3 | ரூ. 90.08 | பணியின் அலுவலக மதிப்பில் 1% | வகுப்பு - 1 |

1. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாள் 26.06.2023 மாலை 3.00 மணி
2. ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிக்க வேண்டிய வலைதளம் https://tntenders.gov.in
3. ஒப்பம் திறக்கும் நாள் மற்றும் நேரம் 27.06.2023 மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ / 3042 / ஒப்பந்தப்புள்ளி / 2023

**கண்காணிப்பு பொறியாளர் (ம.நீ.வ.து)**

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்


அமைச்சர் செந்தில் பாலாஜி கைது!

# மனித உரிமை மீறல் மட்டுமல்ல; சர்வாதிகாரத்தின் உச்சம்!

## தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.எஸ்.அழகிரி அறிக்கை!



**சென்னை, ஜூன் 16 - தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி கூறியதாவது." "அமைச்சர் செந்தில் பாலாஜி அமலாக் கத்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளது ஜனநாயக படுகொலை; அவர் ஒரு அரசியல் தலைவர், அவர் எங்கும் ஓடிவிடவில்லை;**

நள்ளிரவில் கைது செய்ய வேண்டிய அவசியம் என்ன?; உள்துறை அமைச்சர் அமித் ஷா வந்து சென்ற மறுநாளில் இது நடக்கிறது என்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. செந்தில் பாலாஜி அமைச்சர் என்பதை விட அவர் மாநில அரசின் பொறுப்பில் உள்ளவர்.

உலக புகழ்பெற்ற விளையாட்டு வீரர்கள் பாலியல் புகார் அளித்தும் பாஜக எம்.பி.யை விசாரிக்கக் கூட மறுக்கிறார்கள். மல்யுத்த வீராங்கனை விவகாரத்தில் மோடி, அமித்ஷா உள்ளிட்டோர் வாய் திறக்கவில்லை. மதச்சார்பின்மைக்கு மிகப்பெரிய எடுத்துக்காட்டாக முதல்வர் மு.க.ஸ்டாலின் திகழ்கிறார். முதலமைச்சர் அரசாங்கத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்த நினைக்கிறார்கள். செந்தில் பாலாஜி கைது செய்யப்பட்டது மனித உரிமை மீறல் மட்டும் அல்ல. சர்வாதிகாரத்தின் உச்சக்கட்டம். மதச்சார்பற்ற சக்திகளின் போராட்டத்தை முடக்க நினைக்கிறார்கள்,"

இவ்வாறு கே.எஸ்.அழகிரி கண்டனம் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் செந்தில் பாலாஜி கைது!

# ஜனநாயகத்தின் மீதான மிரட்டல் போக்கு!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கண்டனம்!



சென்னை, ஜூன் 16 - ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஒன்றிய பா.ஜ.க. அரசு, எதிர்க்கட்சிகளை முடக்குவதற்கு அமலாக்கத்துறை, மத்திய புலனாய்வுத் துறை உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளை ஏவி விடுவது தொடர்ந்துகொண்டு இருக்கிறது. எதிர்க்கட்சிகள் ஆட்சி புரியும் மாநிலங்களில் பழிவாங்கும் நடவடிக்கைகளில் இறங்கி இருக்கிறது. மேற்கு வங்காளம், டெல்லி உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் பா.ஜ.க. நடத்திய அரசியல் சித்து விளையாட்டுகளை தமிழ்நாட்டிலும் அரங்கேற்றுவதற்கு திட்டம் தீட்டி, அதைச் செயல்படுத்த முனைந்திருக்கிறது.

அதன் ஒரு பகுதியாகத்தான் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்திற்குள் அமலாக்கத் துறை அதிகாரிகள் அத்துமீறி நுழைந்து தி.மு.க. அரசுக்கு களங்கம் கற்பிக்க முயற்சிக்கிறார்கள்.

தமிழ்நாடு மின்சாரத் துறை மற்றும் ஆயத்தீர்வுத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி அமலாக்கத் துறை விசாரணைக்கு முழு ஒத்துழைப்புக் கொடுப்பதாக தெரிவித்தும்கூட, விசாரணை முடிந்து, எந்தவிதமான சட்ட நெறிமுறைகளையும் பின்பற்றாமல் நள்ளிரவில் அவரைக் கைது செய்து துன்புறுத்தி யிருப்பது வன்மையான கண்டனத்திற்கு உரியது. ஜனநாயகத்தில் இத்தகைய மிரட்டல் போக்குகளுக்கு ஒருபோதும் இடம் இல்லை. இதனை திராவிட முன்னேற்றக் கழக அரசு முறியடிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்."

என்று குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் செந்தில் பாலாஜி கைது :

# ஒன்றிய பா.ஜ.க. அரசின் அப்பட்டமான அதிகார அத்துமீறல்!

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இரா.முத்தரசன் கண்டனம்!



சென்னை, ஜூன் 16 - இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் இரா. முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

செந்தில் பாலாஜி கைது அப்பட்டமான அதிகார அத்துமீறல் ஒன்றிய அரசின் அமலாக்கத் துறையினர் தமிழ்நாடு அரசின் மின்சாரம் மற்றும் மதுவிலக்குத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜியை 14.06.2023 அன்று அதிகாலை 2 மணிக்கு கைது செய்துள்ளனர். கடந்த சில வாரங்களாக அவர் மீது குறிவைத்து நடத்தப்படும் சோதனை தாக்குதலால் அவர் மன உளைச்சலுக் கும், அலைச்சலுக்கும் ஆளாகி மன அழுத்தம் அதிகரித்து கடுமையான நெஞ்சுவலி ஏற்பட்ட தால் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பெற்று வருகிறார். ஒருவர் மீது புகார் எழுமானால் அதனை விசாரித்து, குற்றத்தை உறுதி செய்து, தண்டனை வழங்கும் முறை சட்டத்தின் ஆட்சியில் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆனால் பா.ஜ.க. ஒன்றிய அரசு சட்டத்தின் ஆட்சியை அடியோடு தகர்த்து வருகிறது. பல கட்சி ஆட்சி முறையை அனுமதிக்கும் ஜனநாயக முறையை நிராகரித்து, ஒரு நபரை மையப்படுத்தும் சர்வாதிகாரம் கட்டமைக்கப் பட்டு வருகிறது. மக்கள் ஆட்சியை உறுதி செய்துள்ள அரசியல் அமைப்புச் சட்டம் சிறுமைப்படுத்தப் படுகிறது. மாநிலங்கள் இணைந்த ஒன்றியம் என்ற கூட்டமைப்புக் கோட்பாடு தகர்க்கப்பட்டு எதிர் கட்சிகள் மீது தாக்குதல் நடத்தும் கருவிகளாக விசாரணை அமைப்புகள் மாற்றப்பட்டுள்ளன.

காங்கிரஸ் கட்சியின் முன்னணி தலைவர் ராகுல் காந்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் உரிமை பறிக்கப்பட்டது. டெல்லி துணை முதலமைச்சர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். மேற்கு வங்கத்தில் மாநில அமைச்சர்கள் மிரட்டப்படுகின்றனர். தெலுங்கானா முதல மைச்சர் அச்சுறுத்தப்படுகிறார். இதன் தொடர்ச்சியாகவே தமிழ்நாட்டிலும் பா.ஜ.க. ஒன்றிய அரசு ஆளுநர் மாளிகை வழியாகவும், விசாரணை அமைப்புகள் மூலமாகவும் தாக்குதலை நடத்தி வருகிறது. பா.ஜ.க.வின் நிர்பந்தத்திற்கு பணிந்து மாநில உரிமைகளை பறிகொடுத்து ஒன்றிய அரசின் பல்லக்குத் தூக்கியாக நடந்த அ.இ, அ.தி..மு.க அரசை அகற்றி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி அமைத்து தமிழ்நாட்டின் மக்களின் பேராதரவைப் பெற்று ஆட்சி அமைத்துள்ள தி.மு. கழக அரசுக்கும், ஜனநாயக சக்திகளுக்கும் விடப்பட்ட சவாலாகும்.

தமிழ்நாட்டில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மக்களின் பேராதரவோடு அமைத்துள்ள திராவிட முன்னேற்ற கழக அரசை மிரட்டும் பா.ஜ.க. ஒன்றிய அரசின் அப்பட்டமான அதிகார அத்துமீறல் நடவடிக்கையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

இவ்வாறு இரா.முத்தரசன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பஞ்சமி நில விவகாரத்தில் நோட்டீஸ்:

# முரசொலி தொடர்ந்த வழக்கிற்கு ஏன் பதில் அளிக்கவில்லை?

## எஸ்.சி., எஸ்.டி. ஆணையத்துக்கு சென்னை உயர்நீதிமன்றம் கேள்வி!

சென்னை, ஜூன்.16- பஞ்சமி நிலத்தில் முரசொலி அலுவலகம் உள்ளதாக நோட்டீஸ் அனுப்பியதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கிற்கு இதுவரை ஏன் பதில் அளிக்கவில்லை? என்று தேசிய எஸ்.சி., எஸ்.டி. ஆணையத்துக்கு சென்னை உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

**பஞ்சமி நிலம்**

சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள முரசொலி அலுவலகம் பஞ்சமி நிலத்தில் உள்ளதாக குற்றம் சாட்டி பா.ஜ.க. மாநில செயலாளர் சீனிவாசன், தேசிய எஸ்.சி., எஸ்.டி. ஆணையத்தில் புகார் அளித்திருந்தார். இதுகுறித்து விளக்கம் அளிக்கக் கோரி கடந்த 2019 நவம்பர் 14ஆம் தேதி மற்றும் டிசம்பர் 13 ஆம் தேதி தேதிகளில் முரசொலி அறக் கட்டளைக்கு எஸ்.சி., எஸ்.டி. ஆணையம் நோட்டீஸ் அனுப்பியது. இந்த நோட்டீசுகளை ரத்து செய்யக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் முரசொலி அறக்கட்டளை தரப்பில் வழக்கு தொடரப்பட்டது. நீண்ட காலமாக நிலுவையில் இருந்து வந்த இந்த வழக்கு, உயர்நீதிமன்றம் நீதிபதி அனிதா சுமந்த் முன்பாக நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

**அரசியல் உள்நோக்கம்**

அப்போது முரசொலி அறக்கட்டளை சார்பில் மூத்த வக்கீல் பி.வில்சன் ஆஜராகி, "இந்த புகார் அரசியல் உள்நோக்கத்துடன் அளிக்கப்பட்டது. புகார் அளித்த சீனி வாசனும், விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பிய அப்போதைய எஸ்.சி., எஸ்.டி., ஆணையத்தின் துணைத் தலைவரும், தற்போதைய ஒன்றிய மந்திரியுமான எல். முருகனும் பா.ஜ.க.வைச் சேர்ந்தவர்கள்.

தமிழ்நாடு பா.ஜ.க. அலுவலகமான கமலாலயம் பஞ்சமி நிலத்தில் உள்ளது என யாராவது புகார் அளித்தால் இது போல விசாரணை நடத்துவார்களா? இந்த புகாரை விசாரிக்க தேசிய எஸ்.சி., எஸ். டி ஆணையத்துக்கு எந்த அதிகாரமும் இல்லை. இந்த வழக்கில் தேசிய எஸ்.சி, எஸ்.டி. ஆணையத்தலைவர் தரப்பில் இதுவரை எந்த பதில்மனுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்று வாதிட்டார்.

**ஏன் பதில் இல்லை?**

அதற்கு பதிலளித்த தேசிய எஸ்.சி, எஸ்.டி ஆணையம் சார்பில் ஆஜரான மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.ஆர்.எல்.சுந்தரேசன், இந்த விவகாரத்தை நாங்கள் அரசியலாக்க விரும்பவில்லை. மனுதாரர் தான் அரசியலாக்கி வருவதாக கூறினார்.

அதையடுத்து நீதிபதி, இந்த வழக்கில் தேசிய எஸ்.சி., எஸ். டி. ஆணையத் தலைவர் ஏன் இன்னும் பதில்மனு தாக்கல் செய்ய வில்லை? என்று கேள்வி எழுப்பினார். பின்னர் இது தொடர்பாக தேசிய எஸ்.சி., எஸ்.டி., ஆணையத் தலைவர் பதிலளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டு விசாரணையை வருகிற 27 ஆம் தேதிக்கு தள்ளிவைத்துள்ளார்.



நீலகிரி மாவட்டம் உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், கூட்டுறவுத்துறை, பொது விநியோக திட்டம், தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண் வணிகத்துறை உள்ளிட்ட துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சா.ப.அம்ரித், தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் கருப்புச்சாமி, குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் பூஷணகுமார், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர் முருகானந்தம் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் உள்ளனர்.